ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

*Vol:1 Issue : 3 July 2019*

கோட்டை :1 வாயில்:3 ஜூலை 2019

# அரண் Aran

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

*International e Journal of Tamil Research*



## ஆசிரியர் குழு

முனைவர் ஆ.மணவழகன்
முனைவர் கு.சிதம்பரம்
முனைவர் ஆர்.கமல தியாகராஜன்
முனைவர் டி.ஆதித்தன்
முனைவர் இராஜேந்திரன் முனியாண்டி
முனைவர் மணிமாறன் சுப்ரமணியம்
முனைவர் சில்லாழி எஸ்.கந்தசாமி
கலாநிதி ஸ்ரீவரதராஜன் பிரசாந்தன்
முனைவர் ஹெப்சி ரோஸ்மேரி
முனைவர் சு.முத்துலட்சுமி
முனைவர் சாமி திருமாவளவன்
முனைவர் பா.வேலம்மாள்
முனைவர் விமலா அண்ணாதுரை
முனைவர் கி.ஐயப்பன்
முனைவர் பி.இராசலிங்கம் (தமிழகன்)
திரு வி.பாலமுருகன் (மயிலம் இளமுருகு)
முனைவர் வே.வே. மீனாட்சி
முனைவர் ஸ்வர்ணவேல் ஈஸ்வரன்
முனைவர் சி. கார்த்திகேயன்
முனைவர் *K.*முத்துராமன்
பேரா. முனைவர் சு.இராசவேலு
பேரா. முனைவர் வீ.செல்வகுமார்
முதுமுனைவர் குடவாயில் பரலாசுப்பிரமணியன்
முனைவர் ர.பூங்குன்றன்
திரு. கி.ஸ்ரீதரன்
திரு. சரித்திரச்செம்மல் ச.கிருஷ்ணமூர்த்தி
சிற்பக்கலாநிதி ஸ்தபதி வே.இராமன்
திரு. காந்திராஜன்
முனைவர் ஆ.அன்பழகன்
முனைவர் சி. மகேஸ்வரன்
முனைவர் எஸ்.சந்திரசேகரன்
முனைவர் *P.*பாண்டிக்குமார்
முனைவர் பகவதி சுந்தரம் சிவமாருதி
முனைவர் எம்.கஜராஜன்
திரு. கா. பால கிருஷ்ணன் (பாலபாரதி)
திரு. சிங்க நெஞ்சன்



## நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்
## இதழாக்கம்

**பேரா. முனைவர் பிரியாகிருஷ்ணன்**

***+917299587879***

www.aranejournal.com
aranjournal@gmail.com



அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.



Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

# அகத்தினுள்


கடைச்சங்கக் கடைசி அரசனின் அறியப்பெறவேண்டிய வரலாறு
முனைவர் வாணி அறிவாளன்

புறப்பொருள் வெண்பாமாலை வெளிப்படுத்தும் வாழ்வியல் நெறிகள்
முனைவர் க.லெனின்

ஒப்பீட்டு நோக்கில் அகத்திணை மரபும் காமத்துப்பாலும்
முனைவர் ப.விமலா அண்ணாதுரை,

குறிஞ்சித்திணையில் கருப்பொருள் வெளிப்பாடு
முனைவர் தி.மணிமொழி

சங்ககாலப் பெண்பாற்புலவர் பாடல்களில் நாடகக் காட்சிப்படிமம்
து. உமாமகேஸ்வரி

பதினெண் கீழ்க்கணக்கில் இருவாழ்விகள்
திருமதி ச.மீனாட்சி

தமிழ்ச் சிறுகதைகளின் மாறுபட்ட சமூகநிலைகளும் பின்புலங்களும்
முனைவர். வி.கலாவதி

தமிழ் நாடகங்களின் விளம்பர உத்திகள்
முனைவர்.க. தினகரன்

இணையத்தில் தமிழ் மொழியின்பயன்பாட்டை மேம்படுத்தல் - ஒருங்குறியீட்டு முறை
இரா.அருணா,

தமிழ் மின் அகராதிகள் (E-Dictionaries in Tamil)
முனைவர் மா.ரமேஷ் குமார்

நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் சடங்குகள்
முனைவர் சீ. இளையராஜா

சிறுதெய்வவழிபாட்டுமுறைகளில் மக்களின் எண்ணங்கள்
முனைவர் தே. அசோக்

# அகத்தினுள்

INCORPORATION & MANIFESTATIONS OF 'SATI ELEMENTS' WITHIN THE HERO-STONES OF WESTERN TAMILNADU
**Dr. C.Maheswaran**

Neolithic Grooves found at Keezanur, Javadi hills of Tamil Nadu
**Dr. R.Ramesh**

பழந்தமிழர் பண்பாட்டில் தோல் ஓவியத்தின் பயன்பாடு
**ஓவியர். கு. கவிமணி**

Recent Archaeological Explorations in Shervarayan Hills, Tamil Nadu
**-Dr. Priyakrishnan**

ஈழப்பாண்டியன் சேந்தன் மாறன் காசு
**இராஜ சுப்பிரமணியன்**

சிலப்பதிகாரத்தில் தொல்குடிகளின் வழிபாட்டு மரபுகள்
**கோ.சதீஸ்**

தமிழகப்பழங்குடிகளின் தெருக்கூத்து அமைப்புமுறை
**முனைவர் ரே.கோவிந்தராஜ்**

உயிரியல்மற்றும் சமூகமொழியியல் பார்வைகளில் பாரதியாரின் தேசீயப் படைப்புகளின்பகுப்பாய்வு
[Biolinguistics and Sociolinguistics Approach towards Nationality in Bharathiar Patriotic Poems]
**முனைவர் சு. சந்திரசேகரன், முனைவர் சி.சித்ரா**

முகப்பு
மராத்திய நடன மங்கை (தோல் பாவை)

# தமிழ்



# கடைச்சங்கக் கடைசி அரசனின் அறியப்பெறவேண்டிய வரலாறு

முனைவர் வாணி அறிவாளன்
துணைப் பேராசிரியர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்

**ஆய்வுச் சுருக்கம்:**

'கடைச்சங்கக் கடைசி அரசனின் அறியப்பெறவேண்டிய வரலாறு' என்ற தலைப்பிலான இக்கட்டுரையில், இறையனார் களவியல் உரை குறிப்பிடும் கடைச்சங்க காலக் கடைசி அரசனான உக்கிரப்பெருவழுதியின் வரலாறு ஆய்ந்து தரப்பெற்றுள்ளது. மிகுந்த படைபலமும் போராற்றலும் கொண்ட மறவனாக மட்டுமின்றி, தமிழ்ப்பற்றும், தமிழினப்பற்றும் உடைய புலவனாகவும், புரவலனாகவும் விளங்கிய உக்கிரப்பெருவழுதியின் புலமைமிக்க வரலாற்றினை ஆய்வுலகம் அறிந்துகொள்ளவேண்டும் என்ற நோக்கில் இக்கட்டுரை அமைக்கப்பெற்றுள்ளது.

**திறவுச் சொற்கள்:**

கானப்பேரெயில், திருவள்ளுவமாலை, இறையனார் களவியல் உரை, பாண்டியன் நெடுஞ்செழியன், உருத்திரசன்மன், நக்கீரர், மாங்குடி மருதனார்.

பழந்தமிழகத்தில் மூன்று சங்கங்கள் இருந்த குறிப்பினைக் கி.பி. 9ஆம் நூற்றாண்டில் வரிவடிவம் பெற்ற இறையனார் களவியல் உரை தருகின்றது. அம் முச்சங்கங்களுள், கடைச்சங்கமான மூன்றாம் சங்கத்தைச் சார்ந்த அரசர்களைக் கூறும்போது, முடத்திருமாறன் முதல் உக்கிரப்பெருவழுதி வரை என அவ்வுரை குறிப்பிட்டுள்ளது. அவ்வகையில் கடைச்சங்கத்தின் கடைசி அரசனாக அறியப்பெறுபவன் உக்கிரப்பெருவழுதி ஆவான். இவன் மிகுந்த படைபலமும் போராற்றலும் கொண்ட மறவனாக மட்டுமின்றி, தமிழ்ப்பற்றும், தமிழினப்பற்றும் உடைய புலவனாகவும், புரவலனாகவும் விளங்கினான். அத்தகைய அறிவாற்றலும் போராற்றலும் மிக்க உக்கிரப்பெருவழுதியின் அறியப்பெறவேண்டிய வரலாற்றினை எடுத்தியம்புவதே இக்கட்டுரையின் நோக்கம்.

**கானப்பேரெயில் கடந்த வெற்றி**: போர்க்களத்தில் மிகத் துணிந்த விரைவுடனும் பெருச்சினத்துடனும் போரிடும் ஆற்றல் கொண்டு விளங்கியமையால் 'உக்கிர' என்னும் அடைமொழியுடன் அழைக்கப்பட்ட பாண்டியன் உக்கிரப்பெருவழுதியை, ஐயூர் மூலங்கிழார் எனும் புலவர் புறநானூற்றில் பாடியுள்ளார்(21). அப்பாடலில், இம்மன்னனின் கானப்பேரெயில் வெற்றியைப் புகழ்ந்து பாடியுள்ளார். வேங்கை மார்பன் எனும் பாண்டிய மன்னனால் ஆளப்பெற்ற கானப்பேரெயிலைக் கடந்து வெற்றி கொண்ட நிகழ்வைச் சிறப்பித்துப் பாடியமைக்குக் காரணமுண்டு.

கிழக்குத் தொடர்ச்சி மலையில் ஆரம்பித்து பழனி, திண்டுக்கல், அழகர்மலை, பிரான்மலை, காரைக்குடி, சாக்கோட்டை, காளையார்கோயில், கீழாநல்லிக்கோட்டை வரைக்கும் பல நூறு மைல்களுக்கு ஒரு அடர்ந்த கானகம் இருந்தது. அக்காட்டுப்பகுதி "கானாடு" என்றும், அந்த காட்டின் நடுவே இருந்த உயரமான கோட்டையானது கானப்பேரெயில் என்றும் அழைக்கப்பெற்றன. இக்காலத்தில் சிவகங்கை மாவட்டத்தில் காளையார் கோவில் என வழங்கப்பெறும் ஊரே அக்காலக் கானப்பேரெயில் ஆகும்.

பாண்டிய நாட்டுக் கோட்டைகளுள் பழைமை வாய்ந்த, மருது சகோதரர்கள் ஆண்ட, இக்காளையார்கோட்டையைக் கைப்பற்ற எண்ணிய ஆங்கிலேயப் படைகள் முப்பது நாட்களாகக் காடுகளை அழித்துப் பாதை அமைத்து முன்னேறியதாம். இருப்பினும் ஆறுமைல் சுற்றளவில் பரவியிருந்த இக்கானப் பேரெயில் ஆங்கிலேயரை முன்னேறவிடாமல், பின்வாங்கச் செய்ததாம். இத்தகைய கோட்டையானது, பலநூறு ஆண்டுகளுக்குமுன் உக்கிரப்பெருவழுதியால் கடக்கப்பெற்றபோது இருந்த நிலையை

நிலவரை இறந்த குண்டுகண் அகழி,
வான்தோய்வு அன்ன புரிசை, விசும்பின்
மீன்பூத் தன்ன உருவ ஞாயில்
கதிர்நுழை கல்லா மரம்பயில் கடிமிளை,
அருங்குறும்பு உடுத்த கானப் பேரெயில் -புறநா.21

என ஐயூர் மூலங்கிழார் காட்சிப்படுத்தியுள்ளார். அதாவது ஆழமான அகழியுடன் விளங்கிய கோட்டையைச் சுற்றி எழுப்பப்பெற்றிருந்த புரிசை எனப்பெறும் மதிலானது, வானைத் தொடுமளவு மிக உயரமாக இருந்ததாம். அம்மதிலில், ஞாயில் எனப்பெறும் கோட்டையைக் காக்கும் மறவர்களுக்கான அறைகள் ஏராளமாக அமைந்திருந்தனவாம். ஞாயில்கள் எனப்பெறும் அவ் அறைகளைக் கோட்டைக்கு வெளியிலிருப்போர் காண இயலாது. அஞ்ஞாயில்கள், சின்னஞ்சிறு துளைகளாக மட்டுமே காணப்பெறும். அத்துளைகள் வழியாகக் கோட்டை மறவர், பகைவரை நோக்கி அம்புகளையும், ஈட்டிகளையும் எய்து தாக்குவர். அளவால் சிறிய அஞ்ஞாயில்கள் எண்ணிக்கையில் மிக்கிருந்தமையால், அத்தோற்றத்தைப் புலவர் வானத்தில் தோன்றும் விண்மீன்களுக்கு ஒப்புமைப்படுத்தியுள்ளார். மேலும் கோட்டையைச் சுற்றி, அடர்ந்த காடுகளை உருவாக்கியிருப்பர். அதனை மிளை என்பர். கதிரவனின் கதிர்கள்கூட நுழையமுடியாத அளவிற்கு மரங்கள் நிறைந்த அடர்காடாக இருந்த மிளையானது, அருங்குறும்பாக(கடத்தற்கு அரிய அரணாக) விளங்கியது. ஏனெனில் அந்நாட்டிற்குரிய மறவர் காவற்காட்டினுள் மறைந்திருந்து பகைப்படையினரைத் தாக்கிப் போரிடுவர். அடர்ந்த காடுகளின் பல முனைகளிலிருந்து நிகழும் அம்மறைமுகத் தாக்குதலை எதிர்கொண்டு முன்னேறும் செயலானது, பழுக்கக் காய்ச்சிய இரும்பில் பட்ட நீர்த்துளியை மீட்டுதலைப் போன்று இயலாதது என ஐயூர் மூலங்கிழார் அப்பாடலில்(புறநா.21) குறிப்பிட்டுள்ளார். அத்தகைய அரிய கானப்பேரெயிலைத் தம் படைவலிமையாலும், போர்த்திறமையாலும் கடந்தமையால், கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி எனச் சிறப்பிக்கப்பெற்றான்.

**உக்கிரப்பெருவழுதியும் அகப்பொருளும்:** பழந்தமிழர் அகத்திற்குத் தனிச் சிறப்பிடம் அளித்தனர். சங்க இலக்கியங்களில் புறச் செய்யுள்களைவிட அகச் செய்யுள்களே மிகுதியாயிருப்பது இதற்குத் தக்க சான்று. உக்கிரப்பெருவழுதியும் இதற்கு விதிவிலக்கல்லன் என்பதை, அவன் இயற்றிய இரு அகச்செய்யுள்களும் எடுத்துக்காட்டாய் அமைந்துள்ளன. அவன் இயற்றிய இரண்டுபாக்களுமே, மருதம், குறிஞ்சித் திணைகளைச் சார்ந்த நயமான அகப்பாக்கள்(அகநா.26, நற்.98).

மேலும் இறையனார் அகப்பொருள் எனும் அகப்பொருளிலக்கண நூலும், உரையும் எழுவதற்கு இவனே காரணம் என்பதற்குச் சான்றுகள் உள்ளன. இறையனார் அகப்பொருள் நூலெழுந்ததைப்பற்றி அதன் உரைநூலில் ஒரு வரலாறு கூறப்படுகிறது. அதாவது,

ஒருமுறை, பாண்டியநாடு பன்னிரண்டு ஆண்டுகள் மழையின்றி வறண்டுபோயிற்று. இதனை 'வற்கடம்' என்பர். அச்சூழலில் பாண்டியன் சங்கப்புலவர்களை அழைத்து, 'இப்போது உங்களை என்னால் காப்பாற்ற முடியவில்லை. எங்காவது சென்று பிழைத்துக்கொள்ளுங்கள்' என்று பணித்தான். பின் நாடு செழித்தபின் பாண்டியன்

புலவர்களை அழைத்துவரச் செய்தான். வந்தவர்களில் எழுத்து, சொல், யாப்பு இலக்கணத் துறையினர் மட்டும் இருந்தனர். எழுத்தும் சொல்லும் பொருளதிகாரத்தின் பொருட்டு அல்லாவா உருவாயின. அஃதின்றேன் எழுத்தும் சொல்லும் மட்டும் கிடைத்து என்ன பயன் என்று அரசன் வினவியிருக்கின்றான். மறுநாள் சொக்கலிங்கத்தின் பீடத்தில் செப்பேடு ஒன்றில் இறையனார் களவியல் என்ற பெயரில் 60 சூத்தரங்கள் கொண்ட பொருள் நூல் ஒன்று காணக்கிடைத்துள்ளது. அதற்கு உரையைக் கடைச்சங்கப் புலவர்கள் 49 பேரும் எழுதியிள்ளனர். இவ்வுரைகளில் எதைக் கொள்வது எதை விடுவது என்று சிக்கல் மன்னருக்கும் புலவர்களுக்கும் ஏற்பெற்றிருக்கிறது. இதனைப் போக்குவதற்கு இறைவன் மதுரைக்குப் புறத்தே உள்ள உப்பூரிக்குடியில் ஓர் ஊமைப்பிள்ளை இருப்பதாகவும் அவன் பெயர் உருத்திரசன்மன் என்றும், எந்த உரையை அவன் கேட்கும்போது கண்களில் நீர்மல்க தலையசைத்து கரவொளி எழுப்புகின்றானோ அதுவே சிறந்த உரை என்று அசரீரி எழுந்ததாகவும் வரலாறு கூறுகிறது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட உரை நக்கீரரின் உரைதான் என்று கூறுவர். அதுவே இறையனார் களவியல் உரை என வழங்கி வருகிறது.

இந்தக் கதையில் கூறப்பெற்றுள்ள வற்கடம் வாட்டிய காலத்தில் ஆண்ட பாண்டியனின் பெயர் இந்நூலில் குறிப்பிடப்படவில்லை. வேறு சில நூல்கள் இப்பாண்டியன் பெயரை உக்கிரப்பெருவழுதி என்று கூறுகின்றன. இக்கூற்று ஏற்றுக்கொள்ளத்தக்கதே.

இறையனார் அகப்பொருளுக்கான சிறந்த உரையாக, நக்கீரர் உரையைத் தேர்வு செய்த உருத்திரசன்மனாரே, உக்கிரப்பெருவழுதியின் முன்னிலையில் அகநானூற்றைத் தொகுப்பித்தவ புலவர் ஆவார். ஏனெனில், இறையனார் களவியல் உரையில் குறிப்பிடப்பெற்ற உப்பூரிக்குடிகிழார் மகனார் உருத்திரசன்மனார் என்ற புலவர்பெயரே அகநானூற்றைத் தொகுப்பித்த புலவராக, அகநானூற்றுச் சுவடிகளில் குறிப்பிடப்பெற்றுள்ளது. எனவே இறையனார் களவியலில் குறிப்பிடப்பெற்ற பாண்டிய மன்னன் உக்கிரப்பெருவழுதியே என அறிஞர்கள் கருதுவது ஏற்றுக்கொள்ளத்தக்கது. இதற்கு இரண்டு சான்றுகளைக் கூற இயலும்.

**சான்று ஒன்று:** உக்கிரப்பெருவழுதி இயற்றிய இரு பாக்களும் அகப்பாக்கள்; மேலும் சங்க இலக்கியத் தொகுப்புப் பணியிலும், அகம் பற்றிய நானூறு பாக்களையே தொகுப்பித்து அகநானூறு எனப் பெயரிட்டான். இவ்வாறு அகப்பொருளுக்குச் சிறப்பிடம் தந்த உக்கிரப்பெருவழுதியே, இறையனார் களவியல் எனும் அகப்பொருள் நூலும், உரையும் எழுவதற்கு முயற்சியை மேற்கொண்ட பாண்டிய மன்னனாக இருக்கவேண்டும். துறவுகளை வலியுறுத்தும் மதங்களும், அற இலக்கியங்களும் தமிழகத்தில் பரவிக்கொண்டிருந்த அச்சூழலில், அகப்பொருளின் மேன்மையும், இன்றியமையாமையும் கருதி அகப்பொருள் இலக்கண, இலக்கியங்களின் ஆக்கத்திற்குப் பெருந்துணையாய் நின்று, பாண்டியன் உக்கிரப்பெருவழுதி தமிழுக்கு அரும்பணியாற்றியுள்ளான்.

**சான்று இரண்டு:** திருவள்ளுவரின் திருக்குறள் அரங்கேற்றப்பெற்றது, உக்கிரப்பெருவழுதியின் அவையில்தான் என்பர். ஏனெனில் திருவள்ளுவமாலையில் நாமகள், அசரீரி, இறையனார் ஆகிய வாழ்த்து வெண்பாக்களை அடுத்து, முதலில் மன்னன் உக்கிரப்பெருவழுதியின் வாழ்த்தே அமைந்துள்ளது. இவனை அடுத்து வெண்பாக்களைப் பாடி வாழ்த்தியுள்ள புலவர்களில் இறையனார் அகப்பொருளுக்கு உரை எழுதிய நக்கீரரும், அவ்வுரையைத் தேர்வு செய்த உருத்திரசன்மனாரும் இடம்பெற்றுள்ளமை, இறையனார் அகப்பொருளின் ஆக்கத்திற்கு வழிவகுத்த பாண்டிய மன்னன் கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதியே என்பதை உறுதிசெய்கிறது.

அதனால்தான் இப்பாண்டியமன்னனைப் புகழ்ந்து பாடிய ஐயூர் மூலங்கிழார், 'புலவரை இறந்த புகழ்சால் தோன்றல்' என விளித்துச் சிறப்பித்துள்ளார்(புறநா.21:1).

**பாண்டியன் நெடுஞ்செழியனின் மகனா?:** பாண்டியன் உக்கிரப் பெருவழுதியைத் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் மகன் எனக் கூறுவர். தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், ஒருமுறை, தன்னை எதிர்த்துப் போரிட வந்த இருபெரு சினங்கெழு வேந்தரைத் தான் தோற்கடிக்கவில்லையெனில்,

ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவன் ஆக
உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக என் நிலவரை -புறநா.72:13-16

எனப் பாடிய வஞ்சினக் காஞ்சிப் பாடல் புகழ்பெற்ற புறநானூற்றுப் பாடல் ஆகும். அப்பாடலில், பாண்டியன் நெடுஞ்செழியனால் குறிப்பிடப்பெற்ற புலவர் தலைவன் மாங்குடி மருதனார், திருக்குறளைப் புகழ்ந்து பாடிய திருவள்ளுவமாலையில் உக்கிரப்பெருவழுதியுடன் பாடியுள்ளமை, இருவரும் சமகாலத்தவர்கள் என்பதை உணர்த்துகிறது. எனவே இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனின் மகனாக இருக்க வாய்ப்புண்டு.

**அகநானூற்றுத் தொகுப்பின்வழி போற்றிய ஒருமைப்பாடு:** பழந்தமிழகத்தில் வடதிசைப் படையெடுப்புகளைவிட மூவேந்தர்கள் தம்முள் உடற்றிப் போரிட்டுக் கொண்ட படையெடுப்புகளே மிகுதி. அவற்றுள் இன்றியமையாத போர், தலையாலங்கானத்துப் போர். இருபெரு வேந்தரொடு ஐம்பெரு வேளிரும் சேர்ந்து தாக்கிய பெரும்போரில், சிறுவனாயினாயினும் அவர்களைப் புறமுதுகிட்டுப் பெருவெற்றி எய்தியவன் பாண்டியன் நெடுஞ்செழியன். செழியனைப் போன்றே, உக்கிரப்பெருவழுதியும் போராற்றல் உடைய மறவனே. ஆனால் தமிழ் வேந்தர்கள் மூவரும் தம்முள் ஒற்றுமையின்றிச் சண்டையிட்டுக் கொள்வது அக்காலச்சூழலில் அறிவுடைமையன்று எனக் கருதிய பெருவழுதி, ஒற்றுமையை நிலைநாட்ட விரும்பினான். சேர, சோழ வேந்தர்களிடம் நட்பு கொண்டு விளங்கினான். ஒரு வேள்வியின்போது உக்கிரப்பெருவழுதியுடன் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும், சேரமான் மாரிவெண்கோவும் நட்புடன் ஒருங்கிருந்த காட்சியினை அவ்வையார் புகழ்ந்து பாடியுள்ளார்(புறநா.367). இவ்வாறு சேர, சோழ வேந்தருடன் ஒற்றுமையாக விளங்கிய உக்கிரப்பெருவழுதி, தாம் தொகுத்த அகநானூற்றின் வாயிலாக, அவ்வொற்றுமையைப் பறைசாற்ற விரும்பினான். அதனால் தாம் தொகுத்த அகநானூற்றினை மூன்று தொகுதிகளாக்கி, அவற்றிற்குக் களிற்றியானைநிரை, மணிமிடைப்பவளம், நித்திலக்கோவை எனப் பெயர்களை இட்டான். இப்பெயரீடுகளுக்கான காரணங்கள் பலவாறாகக் கூறப்பெற்றுவருகின்றன. ஆனால் அகநானூற்றுத் தொகுதிகளின் இப்பெயரீடுகளுக்கான காரணம் மிக அருமையானது.

சங்க காலத்தில், கடல் வணிகம் பழந்தமிழகத்திற்குப் பெருவருவாயை ஈட்டித்தந்தது. பழங்காலத்தில், இந்தியா மட்டுமின்றி, மேலைநாடுகளும் 'யானைகளுக்குச் சேரநாடு; மணிக்கும் பவளத்திற்கும் சோழநாடு; முத்துக்குப் பாண்டியநாடு' என அடையாளம்கூறும் அளவிற்கு முந்நாடுகளும் கடல்வணிகத்தால் பெரும்புகழுடன் விளங்கின. பாண்டியன் உக்கிரப்பெருவழுதி, சேர, சோழ, பாண்டிய நாடுகளின் உலகப் புகழ்மிக்க வணிக அடையாளங்களாகத் திகழ்ந்தவற்றைத் தாம் தொகுப்பித்த நெடுந்தொகைத் தொகுதிகளுக்குப் பெயர்களாக இட்டுப் பழந்தமிழகத்தின் முந்நாடுகளையும் சிறப்பித்துள்ளான். அதாவது, சேரநாட்டைச் சிறப்பிக்கும்பொருட்டு முதல் தொகுதியினைக் களிற்றியானை நிரை என்றும், சோழநாட்டைச் சிறப்பிக்கும்பொருட்டு மணிமிடைப்பவளம் என்றும், பாண்டிய நாட்டைச்

சிறப்பிக்கும்பொருட்டு, அந்நாட்டிற்கு வளத்தை நல்கிய முத்தைக் கொண்டு நித்திலக் கோவை என்றும் பெயரிட்டுள்ளான்.

பழந்தமிழகத்தின் முப்பெரும்நாடுகளும் தம்முள் வேற்றுமைகளின்றி ஒன்றுபட்டுத் திகழவேண்டும் என்ற நன்னோக்குடன், உக்கிரப்பெருவழுதி, தாம் தொகுத்த அகநானூற்றினை இவ்வாறு அமைத்துள்ளான். வழுதியின் போற்றத்தக்க இச்செயலைப் பின்பற்றியே இளங்கோவடிகள், புகார்க்காண்டம், மதுரைக்காண்டம், வஞ்சிக்காண்டம் எனச் சிலப்பதிகாரக் காப்பியத்தைக் கட்டமைத்ததுடன், மூன்று நாடுகளிலும் காப்பியக்கதை நிகழ்வதாகவும் காட்டியிருக்கவேண்டும். பழந்தமிழகத்தின் உலகளாவிய வணிகத்தைப் பெருமைப்படுத்தும்வகையிலும், தமிழ் மூவேந்தர்களுக்கிடையே ஒற்றுமையை நிலைநாட்டும்வகையிலும், அகநானூற்றுத் தொகுதிகளுக்குப் பெயரீடுகளை அமைத்த பாண்டியன் உக்கிரப்பெருவழுதியின் ஒருமையுணர்வு போற்றத்தக்கது.

**முடிவுரை:** கடைச் சங்கத்தின் கடைசி அரசனாக அறியப்பெறும் உக்கிரப்பெருவழுதி,

- கடத்தற்கரிய கானப்பேரெயிலைக் கடந்து, வேங்கை மார்பன் எனும் மன்னனை வெற்றிகொண்டமையால், கானப்பேரெயில் கடந்த உக்கிரப்பெருவழுதி எனச் சிறப்பிக்கப்பெற்றமையும்,
- இறையனார் களவியல் எனும் இலக்கணநூலும், அந்நூலுக்குரிய நக்கீரர் உரையும் தோன்ற வழிவகை செய்த புரவலனாகவும்,
- அகநானூற்றில் ஒரு மருதத்திணைப் பாடலையும், நற்றிணையில் ஒரு குறிஞ்சித்திணைப் பாடலையும் இயற்றிய அகப்பொருளைப் பாடிய புலவனாகவும்,
- திருக்குறள் அரங்கேறுவதற்கு ஆவன செய்ததோடு, திருவள்ளுவரை வாழ்த்தித் திருவள்ளுவமாலை எனும் வாழ்த்து நூல் தோன்றுவதற்கும் காரணியாயிருந்த நல்லரசனாகவும்,
- அகநானூற்றுத் தொகுதிகளுக்குக் களிற்றியானை நிரை, மணிமிடைப்பவளம், நித்திலக்கோவை எனப் பெயர்களிட்டு, மூவேந்தர்களுக்கிடையே ஒற்றுமையை நிலைநாட்டி ஒருமையைப் போற்றிய பெருந்தகையாளனாகவும் விளங்கியமையை அவன்தம் வரலாறு காட்டிநிற்கிறது.

**துணைநின்ற நூல்கள்:**

1. சங்க இலக்கியத் தொகுதிகள்-மூலமும் உரையும், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 2007.
2. இறையனார் அகப்பொருள், ச.பவானந்தம் பிள்ளை, சாரதா பதிப்பகம், சென்னை, 2010.
3. தமிழகம் ஊரும் பேரும், இரா.பி.சேதுப்பிள்ளை, பழனியப்பா பிரதர்ஸ்,சென்னை, 8ஆம் பதிப்பு, 2008.
4. பாண்டியர் வரலாறு, சதாசிவப் பண்டாரத்தார், பூம்புகார் பதிப்பகம், சென்னை-108, 2010.

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்
ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2019, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள்- செப்டம்பர் 10.அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com

aranjournal@gmail.com

72995 87879